# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register — S.T.C. CASE No.122/17.

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 3 |
| Name | : | Abankhan |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.19

முதல் விசாரணை:

நான் இந்த மனுவின் 3ம் தரப்பினர். என்னுடைய முதல்விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அது என்னுடைய தகவலின்பேரில் தயாரிக்கப்பட்டது.

கு.வி.

எனக்கு சாட்சியமளிப்பதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வழக்கறிஞர் சொல்லி வந்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் நான்தான் கையெழுத்திட்டுள்ளேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். முதல்விசாரணை வாக்குமூலத்தினை வாதியின் வழக்கறிஞர்தான் தயாரித்தார். அதில் உள்ள வார்த்தைகள் நான் சொல்லவில்லை. அதனை நான் படித்துப்பார்த்தேன். ஆஜர் எதிரியை எனக்கு 11 ஆண்டுகளாகத் தெரியும். கிரின் லைஃப் கம்பெனியின் மூலம் எனக்கு எதிரி அறிமுகமானார். அந்த கம்பெனியில்

பணம் செலுத்துவதற்காக நானும் செல்வேன். எதிரியும் பணம் செலுத்துவதற்காக அங்கு வருவார். எதிரி 10.2.2016ல் என்னிடம் பணம் கேட்டார். அதற்கு முன்பும் 10 நாட்களாக என்னிடம் பணம் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் என்னிடம் ரூ 3 லட்சம் கேட்டார். கலியாண செலவிற்காக அந்த தொகையை கேட்டார். முதல்விசாரணையில் கலியாண செலவிற்காக எதிரி பணம் கேட்டார் என்று சொல்லவில்லை. புகார்தாரரிடம், எதிரி என்னிடம் கலியாண செலவிற்காக பணம் தேவைப்படுகிறது என்று கூறிய விபரத்தினை சொல்லாமல் குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் எதிரி பணம் கேட்பதாக சொன்னேன். எதிரி கலியாண செலவிற்காகத்தான் பணம் கேட்டார் என்ற விபரம் புகார்தாரருக்கு தெரியாது. நான் அவரிடம் சொல்லவில்லை. புகார்தாரர், எதிரி கலியாண செலவிற்காகத்தான் பணம் கேட்டார் என்று சாட்சியத்தில் கூறியுள்ளது தவறு என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. புகார்தாரரை 18 ஆண்டுகளாக எனக்கு தெரியும். அவர் விவசாயம் செய்து வருகிறார். புகார்தாரரிடம் பணம் உள்ளது என்ற விபரம் எனது மச்சான் மூலமாக எனக்கு தெரியும். புகார்தாரர் வட்டிக்கு கடன் கொடுப்பவர் என்றால் சரியல்ல. 10.2.2016ம் தேதியில் புகார்தாரரிடம் சென்று பணம் கேட்டேன். அதற்கு முன்பே அவரிடம் பணம் கேட்டேன். 10.2.2016 தேதியில் சென்று பணம் வாங்கினோம். 10.2.2016 தேதிக்கு முன்பு 2, 3 முறை அவரிடம் கேட்டேன். புகார்தாரர் வீடு சந்தைப்பட்டியில் உள்ளது. ரூ 3 லட்சத்தை பணமாக கொடுத்தார். பணம் கொடுக்கும்போது புகார்தாரர் மட்டும் தான் இருந்தார். நானும் எதிரியும் சென்றோம். அந்தக் கடனுக்கு ஆதரவாக 5.5.2016 தேதியிட்டு அன்றைய தினமே எதிரி காசோலை கொடுத்தார். அந்தக் காசோலையை எதிரிதான் நிரப்பினார். எதிரி அதனை ஏற்கனவே எழுதிக் கொண்டு வந்திருந்தார். புகார்தாரர் என் முன்னிலையிலும் அவர் முன்னிலையிலும் எதிரி காசோலையை நிரப்பியதாக சாட்சியமளித்துள்ளார் என்றால் அது தவறான கூற்றாகும். எதிரியின் வீட்டிற்கு சென்று நான்தான் தொகையை திருப்பிக் கேட்டேன். அதன்பிறகு செக்கானூரணியில் உள்ள தேவா ஆப்டிக்கல்ஸ்க்கு வந்து எதிரியும் புகார்தாரரும் பேசினார்கள். அன்றைய தினம் எதிரி சற்று பொறுங்கள் என்று கூறிவிட்டு காசோலை தேதியிலேயே வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு சொன்னார். கடன் கொடுத்த தேதியில் இருந்து காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த தேதிவரை தான் எதிரியைப் பார்க்கவில்லை என்றும் நான்தான் எதிரியை சந்தித்து காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யச் சொன்னதாக புகார்தாரர் சாட்சியமளித்துள்ளார் என்றால் அது தவறான கூற்றாகும். என்னிடம் காட்டப்படும் புகார்தரப்பு சான்றாவணம் 1

காசோலையில் தேதியும், ராமன் என்ற பெயரும் ஒரு மையிலும், தொகை எண்ணாலும் எழுத்திலும் எழுதப்பட்ட மையும் கையெழுத்து ஒரு மையிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு வித்தியாசம் தெரியவில்லை. அவற்றில் கையெழுத்திலும் வேறுபாடு உள்ளது என்றால் அந்த அளவிற்கு நான் படிக்கவில்லை. எதிரி என்னிடம் எந்தக் கடனும் கேட்கவில்லை என்றும் நான் ராமனிடம் எதிரியை அழைத்துச் செல்லவில்லை என்றும் அவரிடமிருந்து எதிரி எந்த தொகையும் பெற்றுக் கொண்டு வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் கொடுக்கப்பட்ட காசோலையை நான் ராமன் மூலமாக நிரப்பி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் எந்தவித கொடுக்கல் வாங்கலும் கிடையாது. கடன் பிரச்சனையும் கிடையாது. 2012ம் ஆண்டு பள்ளிக் கட்டணத்திற்காக நானும் எதிரியும் ஒருவரிடமிருந்து ஒருவர் கைமாற்றுக் கடன் பெற்றுள்ளோம். எதிரிக்கு நான் பழக்கம் என்பதால் வெளிநாட்டில் இருந்து நண்பர் இந்தியாவிற்கு பணம் அனுப்புவதாக சொல்லி எதிரி கணக்கில் அந்த பணத்தை வைப்பீடு செய்யச் சொல்லி அந்த தொகையை எடுத்து தருமாறு எதிரியிடம் நான் கேட்டிருந்தேன் என்று சொன்னால் எதிரியின் வங்கி கணக்கில் சிங்கப்பூரில் இருந்த என் நண்பர் ரூ 3 லட்சம் செலுத்தினார். அதனை பின்பு காவல் நிலையத்தில் பேசி 6 மாதம் கால அவகாசம் கேட்டு பின்னர் எதிரியின் அம்மாவும் அவரது மகனும் சேர்ந்து 2 மாதத்தில் கொடுத்து விட்டனர். அந்த சம்பவம் நடந்தது 2012ம் ஆண்டாகும். . அந்த ரூ 3 லட்சத்தை நான் எதிரிக்கு கடனாக கொடுத்திருந்தேன் என்றும் அதற்காக 2016ம் ஆண்டு வரை அவரிடம் வட்டி பெற்றுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2016ம் ஆண்டு அவரிடம் ஜனவரி மாதம் அவரிடமிருந்து நான் அசல்தொகையை கேட்டு நெருக்கடி கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. அந்த நெருக்கடியை பயன்படுத்தி மீனா என்பவரிடம் பணத்தை வாங்கிக் கொடுத்து அந்த தொகையை நான் பெற்றுக் கொண்டு எதிரியிடம் அவருக்கு வட்டி செலுத்தச் சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. மீனா என்பவரைத் தெரியும். மீனா என்ப்வரால் அந்த தொகையை வசூலிக்க முடியாது என்பதால் அவரது மாமா ராமையாத்தேவர் என்பவர் பெயரில் ரூ 3 லட்சத்திற்கு ஒரு கடனுறுதி பத்திரமும் எதிரியின் இந்த வழக்கு காசோலையும், ஜான் எட்டி என்பவரது கணக்கிற்குரிய காசோலையையும் பெயர் மற்றும் தேதி குறிப்பிடாமல் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மீனாவின் கடனை எதிரி செலுத்தியபின்பு மேற்படி கடன் பத்திரம், மற்றும்

காசோலைகளை எதிரியிடம் திருப்பி கொடுக்காமல் இந்த வழக்கை பொய்யாக ராமன் மூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதுசம்பந்தமாக செக்கானூரணி காவல் நிலையத்தில் எதிரி 1.11.2016 தேதியில் என்மீது புகார் கொடுத்தார் என்றால் என்னை அழைத்து விசாரித்தார்கள். விசாரணையில் மீனா எதிரியிடம் பணம் கொடுத்து காசோலை வாங்கியுள்ள விபரத்தினை ஒத்துக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு மீனா விசாரணைக்கு ஆஜராகாமல் இழுத்தடித்ததால் காவல் துறையினர் எதிரி கொடுத்த புகாரின்பேரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததினால் என்மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் கிரிமினல் ஓபி நம்பர்: 3606-2018 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு 23.3.2018 தேதியில் மனு அனுமதிக்கப்பட்டது என்றால் அதுகுறித்து தெரியாது. இதுதவிர எதிரியைத் தவிர புகார்தாரரிடமிருந்து ஜான்எட்டி என்பவருக்கு கடன் வாங்கிக் கொடுத்துள்ளேன். ஜான் எட்டி எதிரியின் மாமா முறையில் சொந்தம். ஜான்எட்டியை எனக்கு எதிரியின் மூலமாக 2011ல்இருந்து பழக்கம். ஜான் எட்டிவயதானவர்தான். எத்தனை வயது என்று தெரியாது. அவர் நடப்பார். சாமுவேலுவும் ஜான்எட்டியும் உறவினர்கள் என்று ராமனுக்கு தெரிவித்தேன். அவ்வாறு ஜான்எட்டிக்கு கடன் வாங்கி கொடுக்கும்போது தெரிவித்தேன். எதிரி கடன் வாங்கி சென்று 10 நாட்கள் கழித்து ஜான் எட்டியும் எதிரியும் வந்து கடன் வாங்கினார்கள். இருவரும் ஆட்டோவில் வந்தனர். ஜான்எட்டியும் சாமுவேலுவும் உறவினர்கள் என்ற விபரம் ராமனுக்கு தெரியாது ராமன் சாட்சியமளித்துள்ளார் என்றால் ராமனிடம் ஜான்எட்டியும் எதிரியும்பணம் வாங்க வந்தபோது நான் ராமனிடம் அவர்கள் உறவினர்கள் என்று கூறியுள்ளேன். ஜான்எட்டிக்கு கடன் கொடுத்தபோது நானும் ராமனும், இருந்தோம். எதிரியும் ஜான்எட்டியும் இருந்தார்கள். ஜான்எட்டிக்கு பணம் கொடுக்கும்போது எதிரி உடனிருக்கவில்லை என்று ராமன் சாட்சியமளித்துள்ளார் என்றால் அது தவறுதான். ஜான்எட்டியும் எதிரி பெற்ற ரூ 3 லட்சம் அவருடைய மகள் திருமணத்திற்கு போதாது என்று கடன் வாங்கினார். ஜான்எட்டி அவருடைய குடும்ப செலவிற்கும் சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் ரூ 3 லட்சம் கடன் பெற்றதாக அவர்மீது புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்திருந்தால் அது சரியா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் புகார்தாரரிடம் கலியாண செலவிற்கு என்று சொல்லவில்லை. உண்மையில் எதிரியின் மகளின் திருமண செலவிற்காகத்தான் ஜான்எட்டி பெயரில் கடன் வாங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த விபரத்தையும் நான் ராமனிடம் தெரிவிக்கவில்லை. என்மீதுள்ள நம்பிக்கையீன் அடிப்படையில்தான் ராமன் இருவருக்கும்

கடன் கொடுத்தார் என்றால் என்மீதும் என் மச்சான் மீதும் உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் கடன் கொடுத்தார். எதிரி திருமண செலவிற்கு என கடன் கேட்ட நிலையில் ஏன் சில்லரை கடனுக்கு கடன் கேட்டதாக புகார்தாரரிடம் தெரிவித்தேன் என்று சொன்னால் அதற்கான காரணம் தெரியவில்லை. நான் ராமனிடம் பொய் சொல்லி கடன் பெற்று நம்பிக்கை மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய் சொல்வது எனக்கு வழக்கம் என்றும் அவ்வாறு பொய்சொல்லி இந்தக் கடனை வாங்கி கொடுத்ததாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் சாட்சியமளிக்க தகுதியுடையவரல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா காசோலை என்னிடமும் மீனாவிடமும் பெற்ற கடனுக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்றும் இருவரது கடன்களையும் எதிரி செலுத்திய பின்பும் எதிரியை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் காசோலைக்கும் ராமனுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாத நிலையில் ராமன் மூலமாக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

/Sd./ Aban khan

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.